**IN THE COURT OF JUDICIAL MAGISTATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**CC.216/2021**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | துரைராஜ் | Prosecution | LW-3 as PW-3 |
| Father Name | பெருமாள் | Defence | |
| Village | ஆத்துக்குடி | Taluk | Sirkali |
| Calling | | Age | 69/2025 |

Solemnly affirmed by Tmt.R.Geetha Grade III Bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day
09.06.2025. சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரியில் வசிக்கிறேன். முன்னர் கிராம உதவியாளராக பணிபுரிந்தேன். இந்த வழக்கில் எனக்கு முன்பு சாட்சியம் அளித்த கிராம நிர்வாக அலுவலரை எனக்கு தெரியும். ஆஜர் எதிரியையும் எனக்கு தெரியும். கடந்த 13.06.2020ம் தேதி மாலை 5.00 மணிக்கு மேல், நானும் மேற்படி நிர்வாக அலுவலரும் எங்கள் அலுவலகத்தில் பணியில் இருந்தோம். அப்போது, அவருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் ஆத்துக்குடி சுடுகாட்டில் மண் அள்ளப்படுவதாக தகவல் கிடைத்ததன் பேரில், நாங்கள் இருவரும் அந்த இடத்திற்கு சென்றோம். அப்போது அங்கு எதிரி எழிலரசன் மண் எடுப்பதற்காக பொக்லைன் வைத்துக்கொண்டு நின்று கொண்டிருந்தார். விஏஓ அவரிடம் எதற்காக நீங்கள் நின்று கொண்டிருக்கிறீர்கள் என கேட்டதற்கு, எதிரி தான் அந்த சுடுகாட்டில் ஏற்பட்டிருந்த பள்ளத்தை தூர்வாருவதற்காக நின்று கொண்டிருப்பதாக தெரிவித்தார். அவ்வாறு செய்வதற்கு அரசாங்க அனுமதி உள்ளதா என்று விஏஓ கேட்டார். அதற்கு எதிரி அனுமதி உள்ளது என்றும் அந்த அனுமதியை வீட்டில் வைத்திருப்பதாகவும் தெரிவித்தார். நடந்தது அவ்வளவுதான். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

சம்பவ நாளன்று கிராம நிர்வாக அலுவலகத்திற்கு விஏஓ கூப்பிட்டதால் சென்றேனா என்றால் இல்லை நானாகவே சென்றேன். விஏஓ என்னை கூப்பிட வில்லையா என்றால் இல்லை. மண் நல்லதாக சொல்லப்பட்ட இடத்திற்கு நானாக சென்றேனா என்றால் நான் அங்கு சென்று போகும் வழியில் வேடிக்கை பார்த்தேன். எதிரி அந்த இடத்தில் மண் எதுவும் அல்லவில்லை என்றால் சரிதான். அவர் விஏஓ ஓடு தகராறு செய்தாரா என்றால் இல்லை. அதன் பிறகு என்ன நடந்தது என்றால் நானும் அவரும் அவரவர் வீட்டுக்கு சென்று விட்டோம். எதிரி விஏஓவை பணி செய்ய விடாமல் தடுத்தாரா என்றால் இல்லை. மேற்படி விவகாரம் தொடர்பாக விஏஓ காவல் நிலையத்தில் புகார் கொடுத்தது பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. விஏஓ அலுவலகத்தில் அந்த சமயத்தில் வேறு யார் இருந்தனர் என்றால் யாருமில்லை. இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை.

மறுவிசாரணை இல்லை